கு மயம்.



# கந்தசஷ்டி விரதக் கதையும்

யாழ்ப்பாணம், காரைநகர், அரசடிக்காடு
என்னும் பதியில்
கோவில்கொண் டெழுந்தருளி யிருக்கும்

# கதிர்காம வேலவர்
# திருவூஞ்சல் எச்சரிக்கை
# பராக்கும் திருப்பதிகமும்

— இவை —

திருவருள் கொண்டு மேற்படியூர்
மணற்காட்டு மாரியம்மன் கோவில் அர்ச்சகர்
பிரம்மஸ்ரீ கு. ச. நாகமுத்தையர்
அவர்கள் மனையாள்

**நாகரத்தினம்பிகை**

இயற்றியது.

1956.

216·P

294.5

உ
குகமயம்.

தேசிய ஆவணப் பிரிவு
யாழ்ப்பாண நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# கந்தசஷ்டி விரதக் கதை.

காப்பு

சீர்மேவு செவ்வேள் திருவிரதமாக்கதையை
பார்மீது பைந்தமிழாற் பாடுதற்கு—கார்மேவும்
பொற்பமருந் தந்திப்புகர்முகத்துப் புங்கவருங்
கற்பகத்தின் செஞ்சரணங் காப்பு.

வெண்பா

கேட்பவர்க்கு நோய்போம் கிலேசம்போம் பாவம்
[போம்
நாட்டுசிவ சாயுட்சம் நண்ணுமே—கேட்டவரம்
நந்நிதியம் நானிலத்தில் நல்குமரசடியான்
சன்னிதியி லோது புராணம்.

அகவல்

1. திருவளர் ஞானத் திவ்வியவிரதம்
முருகன் சரிதை மொழிந்திட முருகார்
2. பச்சிளங் கொடியோன் பாகன்பகிரதி
நச்சரவணிந்த நாதன்சேவடி
3. சிந்தையிலிருத்திச் சிறியவென் புன்சொலால்
முந்தையோர் உரைத்த மொழிவருங் காதையை
4. கருதியானுரைத்தனன் கண்ணியோர்களும்
பருதியைநோக்கிப் பழித்தமைபோலும்
5. ஓசைபொருந்தும் இனியபாலுததியைப்
* பூசையொன்றருந்திடப் புகன்றமை போலும்
6. வாசமார்கடம்பணி வாரணத்துவசன்
நேசமாம்விரதம் நிகழ்த்துமுன்சொல்லை
7. செந்தமிழ்ப் புலவோர் தேர்ந்திவைபொறுக்க
சிந்தனைபுரிந்தேன் வடிவேற்குமரன்

* பூசை = பூனை

8. தன்னியல்விரதம் தக்க காந்தத்தின்
முன்னியல்சூத முனிவரன் மொழிந்த
9. தோமறுவிரதத் தொல்கதைதன்னை
பாமருவகவற் பாவினூற் பணிப்பன்
10. இருநிலமிமையவ ருலகமற்றுலகம்
வெருவுறவரசுசெய் வெந்தொழிற்சூரன்
11. மேருவின்வடபால் மிகுதவமியற்றி
சீர்கெழுமாமகஞ் செய்தகாலையில்
12. திங்களங்கண்ணியர் செய்யவேணியர்
புங்கவன்சூரன் பொருந்துளியணுகி
13. இயற்றுமுன்தவத்தா லினிமையில் மகிழ்ந்தே
வியப்புடனியல்பால வேட்கைபெறுகென
14. விடைக்கொடியுயர் தவிமலன் கூறலும்
அடர்க்கொடுந்தொழி லுடையசுரகாவலன்
15. உற்றநல்வரத்தை யுகந்துகேட்டலும்
செற்றிடாருன்னைத் தேவராயினும்
16. ஐமுகக்கடவுளா தியாமவரினும்
மொய்மலற்றொடையோய் முருக்குவதரிதென
17. சாற்றியநிசாசரன் றன்மனமகிழ
ஏற்றுபாக னேகின னப்பால்
18. புலவருமுனிவரும் பொன்னகர்வாணரும்
அலமுறுமுளத்தராய் அயனுழையணுகி
19. மருமிகுசரோருக மலரில்வாழ்பவனும்
போயினர்மாயனும் புலவர்யாவரும்
20. சேயிருங்கணிச்சித் தெய்வநாயகன்வாழ்
கயிலையிலடைந்து கடவுளைப்பணிந்து
21. வஞ்சகச்சூரன் வல்வினையுரைப்ப
நஞ்சமர்கண்ட நாயகன்வினவி
22. விறல்கெழுசூரன் விழைத்தவேள்வியால்
அறைவருந்தவத்தால் யரும்வரமழித்தேம்
23. ஆங்கருலகி லரசியல்செலுத்தித்
தீங்குமக்கிளைக்கிற் செவ்வேற்குமரன்
24. அறுமுகக்கடவுள் சரவணத்தடத்திற்
உறுவதுமக் கிடற்காலையிர்
25. எம்மைநீர் நினைக்க வியல்புரிசூரன்
வெம்மைதொலைக்க வேலனும் வருவான்

26. வெருவலீர்போமென்று விமலனுரைப்ப
மருவலர்கற்பக வானனாட்டவரும்
27. பங்கயாசனனும் பதுமலோசனனும்
வெங்குறும்பெறிந்த மெய்த்தவத்தோரும்
28. அரண்விடைகொடுக்க வமருலகடைந்தார்
உரங்கெழுசூரன் இமையவர் உலக
29. வானரங்கையில் அமர்பூந்தொடைபோல
தானவரானவமரர் தமக்கிடர்செய்ய
30. பொற்புறு நெடுவேற் புங்கவன்விரதம்
அற்பசித் திங்கள் அமாவாசிநீங்கிப்
31. பிரதமைமுதலாய் பேசுநாளாறும்
நறைவிரிகமல நான்முகன் முதலாய்
32. மறுவறுதுளப மாலைமார்பினனும்
சுருதிநல்விரதம் துடங்குதற்கெண்ணிப்
33. பானிலவெறிக்கும் பளிங்குமாடம்
தானுறவியற்றித் தமனியமியற்றி
34. நித்திலப்பித்திகை நிரைநிரைநிறுத்தி
வித்துருமத்தால் விளங்குதூணிறுத்தி
35. இந்திரநீல உத்திரமியற்றி
செந்தொளிர்மரகதத் திரள்விட்டஞ்சேர்த்தி
36. மயனாலியற்றிய மாமணிமண்டபம்
பயனீர்க்கடல்சூழ் படியினைச்சுமக்கும்
37. ஆயிரம்பணாத்தலை யனந்தன்நாவால்
ஓவறவுரைப்பினு முரைப்பதற்கரிதால்
38. அவாவுடன் வானவ ரியற்றியமண்டபம்
கனகமுகத்தான் கவினுறு முரைக்கென
39. அன்னமண்டபத்தின் அவிரொளிபரப்பும்
பன்னகமாமணிப் பந்தர்வேய்ந்து
40. பூகனாற்றிய பொற்குடம்பரப்பி
மாகமார்கன்னல் பழக்குலையாம்பை
41. கோகனத்தாற் கோதைசெங்கழுநீர்
நாகப்பூவுடன் ஞளிகோரமும்
42. பைம்பொற்பாலையும் பாடலம்போதுவும்
செம்பொற் கோங்குஞ் சிதமாமுல்லையும்
43. விரைகமழலரிவீ முதலாக
மகிழ்மலர்பிச்சி மலரமந்தாரம்

44. முகிழ்விரிகடம்பும் முருகவிள்கடம்பும்
மருவரி தும்பை மல்லிகைத்தோடும்
45. கோட்டிற்கொடியிற் குலவியபுனலுறை
தோட்டிற்றாணிற் றோரணநாட்டி
46. வெண்ணிலாக்கதிர் நிகர்விதானந்தூக்கி
விண்ணோர்கள்யாவரும் விரைவினிலெழுந்து
47. மாதவம்பயிலும் வசிட்டனைவழுத்தி
சீதமாமணிசேர் செய்யவேணியனைப்
48. பருதியஞ்சுடர்வேற் பண்ணவன்சீர்கெஞ்
சரவணத்தடத்திற் றாமுதித்தவர்க்கும்
49. வல்வினைச்சூரன் வாட்கையைத்துடைத்து
அல்லலைத்தொலைப்பனென் னருந்தவன்மகிழ
50. கந்தவிரதக் கதை யொன்றியற்றி
நந்தமாகரத்தோ னான்முகன் புரந்தரன்
51. தேவர்களெவர்க்குஞ் செப்பியபின்னர்
பூவலர்கமலப் புத்தேள்மகனும்
52. பிரதமைமுதலாய்ப் பேசியசட்டி.
உறையுநாளீறு யுண்டியொழிந்து
53. தற்பையதனிற் சயனமதாகி
அற்புடன்மூல சாகமருந்தி
54. புலரியெழுந்து பொற்புறுதினமும்
அலரியிற்கடன்க ளனைத்தையுமுடித்து
55. அஞ்செழுத்துடனே அறையுமெட்டெழுத்தும்
விஞ்சுமாறெழுத்தால் மேதகுசிவனை
56. நெஞ்சிலிருத்தி நேசத்தாலும்
எஞ்சலில்யோக வியல்பினையியற்றி
57. மன்னுமாமறைதேர் வசிட்டனைவழுத்தி
அன்னமுனிவரு டனக்கதைகூற
58. கும்பவிப்பங் குலவிடுமண்டலம்
நம்புமூன்றிடத்தில் நவையறுகுமரனை
59. தெய்வநாயகியைக் தேன்மொழிவள்ளியை
மையறுஞான மறைதேர் முனிவரன்
60. ஆறுபத்திலான மந்திரத்தால்
வீறுசால்பூசை விதித்தவேள்வியில்
61. அனைத்தையுமியற்றி யருமறைமுனிவரன்
வினைப்பவமறுக்கும் விரதக்கதையைச்

62. சாற்றிமுசிந்த ஷட்டியாந்தினத்தில்
போற்றியசூர்ப விம்பமண்டலமும்
63 எற்றிகின்றிமையோர் யாவரும்இறைஞ்ச
கூற்றினைத்தொலைக்கும் கொடியவேலிறைவன்
64. சிந்தையிரங்கித் தேவர்கள்புரியும்
வந்தனையதனல் வந்துதோன்றிக்
65, கானமர்கடம்பக் கவியார்முருகனை
வானவர்யாவரும் வழுத்தியீதுரைப்பார்

## வேறு.

குருகிவேற் குமரா போற்றி
கொடுந்துயர் தவிர்ப்பாய் போற்றி
மறுமலர்க் கடம்பா போற்றி
மயூரவாகனனே போற்றி
கருணையங் கடலே போற்றி
கண்ணுதல் மைந்தா போற்றி
இருவினை தொலைப்பாய் போற்றி
என்றுநின் றிறைஞ்சினரே.

66 அயிலுடைக்கடவு ளமரரைநோக்கி
பயிலுறுவிரதம் பான்மையின் மகிழ்ந்தோம்
67. வேட்டவைபெறுமென விமலனுங்குரைப்ப
தோட்டலர்கடம்பத் தொங்கல்மார்பினனை
68. நோக்கியவிண்ணவர் நுவலவதற்கிசைந்து
பூக்கிளர்கற்பகப் பொதும்பரில்கிசாசரர்
69 வந்தெமைத்துரந்த வல்வினையதனல்
நொந்தனமெம்மால் நுவலற்கரிதென
70 தேவர்களுரைப்பச் சேவலங்கொடியான்
ஆவதுதணிப்போம் அஞ்சலீர்நீரென
71, வஞ்சகர்சூரன் வலியதுதணிப்போம்
வீரவேற்குமரன் விரைவுடனெழுந்து
72. வீரவாகுவிறல் முசுகுந்தன்
சீரியபதாகினித் திரளுடனெழுந்து
73. சூரன்மாட்டணுகிச் சுரேசரன்மகிழ
வீரமாரவுணன் விறலையுந்தொலைத்து
74. வாரணப்பதாகை மயூரவாகனமும்
பெற்றபின்னமார் பிரமன்மால்புரந்தரன்

75. உற்றனருற்ற வுவமையின் மூழ்க்க
கடிகமழ்நறிய கங்கைநன்னீரால்
76. படிகமண்டபத்தில் பரிவுடன்புகுந்து
மஞ்சனமாட்டி வன்பட்டுடுத்தி
77. விஞ்சியவரியணை விளங்குறவிருத்தி
சாந்தமும் புனுகும் தக்கநற்பன்னீர்
78. சேர்ந்தநாணந் தெளிவுறப்பூசி
மருவார்நறுமலர் மாலிகைபுனைந்து
79. இருபாற்கவரி இமையவரிரட்ட
கவிகையேந்திக் கலன்பலவணிந்து
80. அவிரொளிக்கற்பூர வாலாத்தியேந்தி
ஞானத்தூபமும் நறுநெய்த்தீபமும்
81. வானவர்மங்கையர் வளம்பெறவேந்தி
ஆடகநாட்டில் அமரர்மாதர்
82. பூவுலகத்தோர் புகலுதற்கரிய
தேவமுதியற்றிச் செம்பொற்கலத்தில்
83. பரிவுடனியற்றியப் பண்ணமுதருத்தி
உரியபளுக்காய் வெள்ளிலையுதவி
84. அருக்கியமுதலாய் அடைந்தசோடசம்
செருக்குபசாரம் தேவர்களியற்றிய
85. வந்தனைபுரிந்து மாதவர்நிற்ப
சிந்தனைமகிழ்ந்து செவ்வேற்கடவுள்
86. வேண்டியபெறுகென விபுதருக்குரைப்ப
பூண்டவெஞ்சூரன் புன்மையுந்தவித்தீர்
87. ஐய நீவேண்டு மாசறுவிரதம்
எய்துபாலெய்தவ தென்றுமென்றிசைப்ப
88. நாமவேற்கடவுள் நன்றெனறிசைத்து
தாமரைமலரில்வாழ் சதுர்முகனெடுமால்
89. தம்மையேபின்பு சாற்றியபின்னர்
வெம்மைரொகுதை விபுதேசனையும்
90. புலவர்கள்தம்மையும் பொன்னகர்க்கனுப்பி
இலகியபரிதிபோ லுதிரங்குழித்த
91. மன்னியநெடுவேல் மன்னன்முசுகுந்தன்
தன்னைநோக்கிச் சண்முகக்கடவுள்
92. நிற்குவேண்டுதல் நிகழ்த்துதியென்ன
விற்குலாப்பூணினன் விளம்புதல்நினைந்தான்

93. பண்ணவவடியேன் பாரினில்நெடுநாட்
கண்டுயிலாமற் கவலித்திருந்தேன்

94. துயிலெனும்வார்த்தைத் தாயதுடனுதவிப்
பயிலுந்துயிலிலெனப் பாங்கரின்வந்து

95. எழுப்புகின்றோர் யாவரெனினும்
விளித்தியான பார்க்குறவெம்ப

96. அருளிதியென்ன வாங்கவனருளி
மருமலிகடம்பணி வானவர்சூழ

97. வளம்பயில்திகிரி மன்னன்முசுகுந்தன்
சிலம்பெலாங்கடந்து சேணினையளவும்

98. இலஞ்சிப்பொருப்பில் ஏறிவேலிறைவன்
நிலம்புகளரசனு நெடுந்துயில்புரிந்தான்

99. வண்டுளாயலங்கல் மாலிகைபுனைந்த
கொண்டல்வண்ணன் கொடுவேற்கஞ்சன்

100. மருகனுகமானிலத் துதித்துக்
கஞ்சனைத்தொலைத்த காலையிலடைந்து

101. வஞ்சவேற்சராசந்த னவன்செருப்புரிய
தேவகிமைந்தன் றிருப்புறங்காட்ட

102. மாவடுபடுத்து மன்னன்சராசந்தன்
கொலைத்தொளில்புரியுங் கொடுமையுடையோன்

103 அலைக்கடல்கலக்கும் அயில்வேலரசன்
மாலேயுமானு மம்மலையிலோட

104. முசுகுந்தன் துயிலு முகிறேய்பொருப்பினில்
விசைகொண்டோடிய மேகவண்ணனும்

105. மறையவாங்கோர் புடைவல்லையிலரககன்
அறைகழலண்ணலை யறிவனுமாயன்

106. ஒல்லையிலெழுப்பி யுடற்றுகவென்ன
வெல்லியவேலோன் விரைவினிலவிழிப்ப

107. அடலையாயின னடுக்தொழிலரக்கன்
படலையாமருமப் பார்த்திபனெழுந்துபோய்

108. விசிட்டமாகிய மெய்ப்பொருளரசன்
வசிட்டமாமுனியை வந்தனைசெய்து

109. முருகலர்கடம்பணி முருகவேற்கடவுள்
அருள்பெறும்விரதத் தடைவெலாமொருங்கே

110. சொல்லுதியென்னத் தொழுதுகேட்டலும்
வல்லநான்மறையோன் மற்றிவையோர்ந்து

111. கந்தக்கடவுள் கனவிணைபோற்றி
புந்தியிருத்திப் புளகமரும்ப
112. மருவுமானந்த வாரியிற்றிளைத்து
மன்னனைநோக்கி யிம்மாமறைப்பொருளை
113. உன்னிவினவினை உறுதவப்பயனால்
நின்னையொப்பவர் நீணிலத்தெவரோ
114. மன்னகேளென வகுத்துரைசெய்வான்
வேலுடைக்கடவுள் விரதமான்மியம்
115. அயிலுடைக்கூரெயிற் றாயிரம்பணாடவி
ஆயிரங்கிரண மணிமுடியனந்தன்
116· ஆயிரமுகத்தால் அறையிலுமரிதால்
ஏகமுகத்தா லெங்ஙனமுரைகேன்
117. ஆகிலும்யானும் அறிந்தவாறு
செப்புவன்கேளெனச் செழுமறைதெரிந்த
118. மெய்ப்பொருள்கேளென மேதகவிளம்புவன்
அற்பசிமாதத் தம்புலிவளரும்
119, முற்படுபிரதமை முதலாய்த்துடங்கி
ஆறுநாளுமன்ன தொல்விரதம்
120. பேறுடனோற்போர் மேதவமோடு
புலரியெழுந்து காதல்நீராடி
121. வள்ளிதன்கேள்வனை மனத்திடையிருத்தி
தெள்ளிதினியற்றிய செய்கையைமுடித்து
122. கரும்புருவத்திக் கதலிகைநிறுத்தி
அரும்புறுவிரைமலர்த் தொடைபலதூக்கி
123. குச்சிளம்பாளை கொளுமணம்வீசப்
பச்சிளங்கமுகின் பாங்குடனாட்டி
124. இலகுவிதானத் திடுதிரைநாற்றிக்
குலவியசிகரக் கோலநாப்பட
125. சாலிபரப்பித் தண்டுலம்விரித்து
வாவிநறுநீர் மணிக்குடம்வைத்து
126. வளர்குழைசெயிட்டு மாந்தளிர்வைத்த
குளிர்தருகோலக் கும்பமீதே
127, ஆடகப்பொன்னால் அறுமுகன்உருவை
நாடுறச்செய்து நயந்துதாபித்துக்
128. கெவ்வியமதனாற் கிளர்சுத்திசெய்து
தவ்வியமென்று மறைநூல்விதிப்படி

129. அருக்கிய முதலாய்ப் பெருக்கும் பூசனை
உருக்கிய வன்பால உவந்தினி தேற்றி
130. கந்தமே புளுகு கடிகமள் சுண்ணங்
குங்குமங் களபங் குலவு கோரோசனை
131. பொங்கிய வாசப் பொருள்பல கூட்டி
ஒளிதிரு மேனியில் அளகுறப் புனைந்து
132. மிளிர்தரு மாமணி மிகுகலன் சூட்டி
வெண் பட்டாடை வியன்பெறச் சாத்தி
133. ஒண் பட்டாடையில் உத்தரீகமும்
புரிதெரி முப்புரி பூணூல் விதமும்
134. வரிசையின் முறையால் வனப்புறப்புனைந்து
மல்லிகைத்தோடும் வலம்புரிச்சரமுங்
135. மெல்லியபிச்சியின் விரைமலர்தெரியலும்
மகிளமலர்ந்த முல்லைத்தொங்கலும்
136. வகுளமஞ்சரியும் வனசத்தாதும்
காந்தள்சூட்டுங் கழுநீர்ப்படலையுங்
137. ஆய்ந்திட்டொர்ழிரு மாத்திமாலையும்
உரர்பூங்கடம்பின் றெலியற்போதும்
138. அருகாதலர்ந்த வலரித்தெரியலும்
இந்திரநீலவிலம் பக்கக்கொத்தும்
139. சந்திரனேவெனச் சரோருகத்தண்டையும்
வில்லமுங்குலமு மெச்சியபச்சையும்
140. மெல்விளாகற்கற்றை விரைமருக்கொழுந்தும்
ஆதியவைந்துளவ திபெறச்சூட்டி
141. தீதறுதூப தீபமுங்காட்டித்
தும்பைப்பூவைச் சொரிந்துவைத்ததுபோற்
142. செம்பொற்கலத்திற் றிருவமுதேத்தி
பாலினிற் சமைத்த பாயசம்படைத்துச்
143. சால்பெறச்(சமைத்த) ததிபோசனமும்
வாகுமதுரிசப் பண்ணிபாரமும்
144. வடையுந்தோசையும் வடகமுநறுந்தார்
அடையுங்கிடையா வருஞ்சுவைப்பளமும்
145. முட்டக்குவித்த மோதகத்தொகுதியும்
தேனுடன்கலந்த தினையுங்கண்டமுஞ்
146. சீனிசர்க்கரையுஞ் செழுங்கற்கண்டும்
மாங்கனிகதலி விளாங்கனிபலாவின் 2

147. தேங்கனியிருந்த திரள்மாதளங்கனி
கரும்பிவைமுதலாய்க் கண்டனவெல்லாம்
148. விரும்பியபலசெய் வேத்தியம்பண்ணி
நாகவல்லியுக் துந்துவர்க்காயும்
149. போகமேவுகற் பூரமேமுதலாய்ப்
பஞ்சவாசம் பாற்பெறப்படைத்துத்
150. துஞ்சலில்லாத தூபதீபமும்
ஆலவட்டமு மன்னவைமுதலாய்
151. வ(ா)லிதிற்புரியும் வரிசைகள்புரிந்து
மூலமந்திர முழுதுற்செவித்து
152. முறைதிருக்கோயில் மூக்கால்வலம்வந்து
இறைவனைத்தெண்ட னிட்டுவணங்கிப்
153. போற்றிப்புகழ்ந்து பூசனையதனில்
ஆற்றுக்காரணந் தப்பாதங்கண்
154. யாவையும்பொறுக்க விரந்துபோற்றி
மேவுநல்வரம் வேண்டியவேண்டிய
155. பாங்காயிக்கதை பண்ணுபூசனை
சாங்கோபாங்கந் தானுறமுடித்தபின்
156. அம்மைபங்குறைவோ னாலயப்புகுந்து
மும்முறைசூழ்ந்து முறையினில்வணங்கி
157. போற்றியெழுந்து புரிதருமரன்புகழ்
ஆற்றியபின்னர் றற்றைக்கங்குலின்
158. தீயினிற்பாகஞ் செய்யாதமைத்துப்
புலன்வழியிதையம் போக்காதடக்கி
159. நலம்பெறவாறு நாளுநோற்றபின்
பின்னாட்காலையிற் பெருநீர்மூழ்கி
160. முன்னாட்டோறு மிப்படிச்செய்து
நித்தியத்தொடுதன் நெய்வேத்தியக்கடன்கள்
161. மெத்தியவிதிப்படி மேதகவாற்றி
அரனைப்போற்றும் அந்தணர்தம்மைப்
162. பரனைப்போலப் பாவித்திருத்திக்
கும்பவிம்பந் கொணர்ந்தவர்களித்துச்
163. செம்பொன்மாற்றுந் திருந்துறக்கொடுத்துப்
பூசனைபண்ணிப் போசனமருந்தி
164. ஆசிகள்பெற்றங் கவர்தமைவிடுத்துச்
சிவவேடத்துச் செல்வரோடும்

165. நவமார்சிறப்பின் நற்றவரோடும்
பாறணைபண்ணிப் பயில்தருவிரதம்
166. பூரணமாகப் புரிந்திவைமுடித்தால்
அகத்தியர்கல்விக் ககத்தியனவார்
167. தகைபெறுநீதிக்குத் தன்மனவார்
காமதேனுவுக்குக் காமனவார்
168. எப்பேருலகி லிந்திரனவார்
மேற்பாடுபொருட்டு விட்டுணுவாவார்
169. ஆதலித்தில்லா அரசநீதியும்
ஈதலால்விரத மியற்றுதியென்று
170. சரோருகனருளும் சதுமறைமுனிவரன்
புரோகிதனுகிப் புரிவித்திடலும்
171. வரன்முறைபாக மாதவன்மொழிப்படி
அமசனும்விரத மதனைநோற்றபின்
172. சேவலங்கொடியுடைச் செவ்வேற்கடவுள்
காவல்பெற்றுயந்து கருணைபெற்றிருந்து
173. மருமலர்கமல மாதவனருளால்
இருவகைப்பொருளும் பெருகிடப்பெற்று
174. முன்பணியாத முரட்படைமன்னரைத்
தன்படைவலியாற் றருக்கொடுவணக்கி
175. சாமமும்பேதமும் தானமும்தண்டமும்
யாமுறவியற்றி யிருந்திறைவாங்கி
176. வாருசக்கரம் வகைபெறவுருட்டி
மருவாரிருபதம் மகுடமுறுஞ்ச
177. அடிவார்களல்க ளலங்குதல்செய்ய
மகிதலமேழு மருவார்தலமும்
178. அக்கரணங்க ளாரவழித்து
சக்கிரவர்த்திகள் தாமறுவிறல்குள்
179. உக்கிரவீரத் தொருவனென்றெழுதலும்
எவ்வுலகோரு மின்பமுமியம்ப
180. அவ்வியமில்லா தருளிவீற்றிருந்தான்
இன்னமாயனெழு புவியெங்கும்
181, மன்னர்கோன்செங் கோல்நடாத்துநாளில்
நாணமாபொதும் பர்க்கற்பகநீழலில்
182. வானவரேகத் தானவர்க்கன்று
கமலத்தடத்தில் வாரணம்புகுந்து

183. குமிறிக்கலக்கிய கொள்கைபோல
புலவரையடரத்துப் புனைவளங்கவர்ந்து
184. நனிதருசொல்லால் நனிநனிநடுங்கி
புலவர்கள்யாரும் புரந்தரன்றனும்
185. நிலமிசைவந்து நினைவுறத்தேர்ந்து
இன்னவாறே முன்னொருகாலம்
186. பொன்னுலகளித்துப் புலவரைநலிந்து
மூரனெடுசூரன் முதலோடுகளைந்து
187. வரையைக்குளைய மாட்டியநெடுவேல்
பன்னிருதடந்தோட் பண்ணவனருளால்
188. மன்னனனறியே வின்னலொழிப்பார்
பின்னையாரென்று முன்னித்தெளிந்து
189. மற்றவன்றன்பால் வந்துதங்குறை
முற்றவுணர்த்தலு முளுவதுங்கேட்டுத்
190. கார்த்திகேசனைக் கையுறவணங்கி
ஏத்தியெழுந்து இரதமேற்கொண்டு
191. நாற்படைசூழ நகரிற்சென்று
போற்படையரசரைப் புரந்தரன்முருக்கிப்
192. பைந்தருநீளலிற் பண்ணவரேத்த
இந்திரன்றன்னை யிருத்தியபின்னை
193. மன்னனைநோக்கியே யாவருமுரைப்பார்
இன்னதற்குயாங்க ளின்னகைமாறு
194 செய்யினும்பெறுமோ சிறிதறமேனும்
அய்யநின்மனத்தி லருத்தியேதுரையென
195, உன்னிடைவேண்டுவ தொருபொருளென்றனன்
அபிராணிவெள்ளைய பிராவதமுமே
196. யாதொளிந்தவையே யெப்பொருளேனும்
அன்னவைவேண்டில் மறுப்பதுமுளதோ
197. என்னநன்முகமனினி தினிபம்பலும்
உன்னதுபூசை யுகந்துகொண்டருளும்
198. சென்னியம்பிறை சேர்செல்வனைத்தருகென
மறுக்கவுமாட்டான் வளங்கவுமாட்டான்
199. உறுத்திடத்கனது உள்ளந்தேர்ந்து
தருகுவனுனின் றன்பதிக்கேகெனப்
200. பெருநிலமன்னனைப் பின்சென்றனுப்பி
கைவருந்தெய்வக் கம்மியற்கூவி

201. தெய்வநாயகன்வாள் தியாகேசனைப்போல
மற்றொருவிம்பம் வகுப்பித்திருந்தான்
202. அற்றைநாளிரவி னவனிமன்னவன்முன்
கனவிடைவந்து நினைவதுபோல
203. புனைமதிவேணிபுங் கவனுரைப்பான்
புரந்தரன்நம்மைக் கவர்ந்தனனாகி
204. வரம்பெறுகம்பியன் வகுத்தவிம்பம்
தன்னையுனக்குத் தருவதற்கிசைந்தான்
205. இன்னமுனக்குத் தெளிவுறக்கேண்மின்
அனிபுளுகொளுகுஞ் செவ்வந்தித்தோடும்
206. மணிநிறக்களுநீர் மனறற்றென் றலும்
புதியநறுங் கற்பூரவாடையும்
207. இதுமுதற்கண்டால் யாமென்றறிநீ
என்றலுமகிழ்ந்து நன்றெனவேந்தன்
208. துன்றியபசும்பொற் றுறக்கத்தேகலும்
வாசவனெதிர்கொண் டாசனத்திருத்தி
209. இராசராசனுக் கினியனபுகட்சி
மற்றவிக்கிரக முன்னற்களித்தலு
210. உற்றநற்கனவி னுறுபயனோர்ந்து
இதுவலதென்றே யிப்படியிலியற்று
211. கதுமெனமறுக்கக் கவலித்திந்திரன்
அடிக்காயிரம்பொன் னளிக்குநதியாகரை
212. சுடர்த்தாள்கனகத் தொல்பதிநீங்கித்
துன்றியவிளக்காத் தொல்புவியதனில்
213. சென்றிருந்தருளத் திருவுளம்போலுமென்
றிசைந்திட்டரசற் கிவரவர்காணென
214. வசந்தியாகரை மகிழ்ந்தினிதளித்தான்
இன்னவர்முதலா யேழுவிடங்கரையும்
215. பொன்னகர்நீங்கிப் புவியினிற்கொணர்ந்து
ஆரூர்நாகை யணிநள்ளாறு
216. சீரார்மறைசை திருக்காறாயல்
கோளரிவான்மியூர் கூறுமிப்பதியில்
217. ஆளுடைவிடங்கரை யமைத்தினிதிருத்தி
சினகரமியற்றிச் சிறப்புடன்வணங்கி
218. தினவுறுபூமியில் விளாவுகடாத்திச்
செய்தனனதனும் சீர்பலதிருத்தி

219. வையகந்தழைத்து வாழ்ந்தனனின்னும்
மூவுலகெல்லாம் பொதுவறப்புரந்து
220. கடைமுறைகயிலை கணங்களுக்கிறையாம் (கெல்லாம்)
அடைதருந்நதிபோ லமரரிற்சிறந்தபின்
221. ஆலமென்னய வுணவைக்கடிந்தான்
நந்தன்முதலாய நற்றவர்போற்று
222. ஆரணமுதலாய ருந்திசைவளர்த்தான்
பிணிமலர்கமலப் பிரமாண்டங்கள்
223. களிபினுங்களியாக் கதிபெற் றுய்ந்தான்
இக்கதைபடித்தோர் எழுதினோர்கேட்டோர்
224. மிக்கெனவியந்தோர் விழைவுடனேற்றோர்
வேண்டியதெல்லாம் வீறுடன்பெற்றுஇருப்பார்
225. குமராபோற்றி குருபராபோற்றி
சமரவீரசய தராபோற்றி
226. விண்ணவாபோற்றி வேலவாபோற்றி
அனங்காபோற்றி யமலாபோற்றி
227. புணைதருகடம்பா போற்றிபோற்றி
கேள்கொண்டவைவேற் கிளவோன்கதைகேட்டுச்
228. சூள்இன்றவன்பிற் றுதித்தோர்கள்—வாள்வரால்
மண்மங்கையுங்கமல மலர்மங்கையு மருள்கூர்ந்(து)
தெ(எ)ண்மங்கலமிசைக்கு.

சீர்மேவு செவ்வேள் திருவிரதமாக் கதையை
பார்மீது பைந்தமிழாற் பாடுதற்கு —கார்மேவு
பொற்பமருந் தந்திப் புகர்முகத்துப் புங்கவனும்
கற்பகத்தின் செஞ்சரணங் காப்பு.

வேலும்மயிலும் துணை

சிவாயநம
குமாரகுருபரன் துணை.

குகமயம்.

யாழ்ப்பாணம், காரைநகர், அரசடிக்காடு
என்னும் பதியில்
கோவில்கொண் டெழுந்தருளி யிருக்கும்

# கதிர்காம வேலர்

# திருவூஞ்சல் எச்சரிக்கை

# பராக்கு.

திருவூஞ்சல் காப்பு.

சீரோங்கு நதிமதியம் அணிந்த பெருமான்
திருநுதலின் அறுபொறியாய்ப் பொலிந்து தோ
பேரோங்கு சரவணத்தி னிடைவளர்ந்து [ன்றிப்
பேசரிய கதிரைமலைப் பதியில்வந்து
பாரோங்கு காரைநக ரரசடிக்கான்
பதியிலமர் கதிர்காம வேலர் தம்மேல்
ஏரோங்கு மூஞ்சலிசை யினிதுபாட
இபவதன னிருசரணங் காப்பதாமே.

நூல்

1. சீருலவு நான்மறையே கால்களாகச்
சிறந்துலவு மாகமமே விட்டமாகப்
பேருலவுங் கலைக்ஞானங் கயிறதாகப்
பேசரிய பிரணவமே பீடமாக
ஏருலவும் படியமையு மூஞ்சல்வைகி
இனிதேத்து மரமகளிர் வடந்தொட்டாட்ட
காருலவுங் காரைநக ரரசடிக்கான்
கதிர்காம வேலவரே யாடீரூஞ்சல்

2 ஆயிரமா கோடிகதி ருதித்ததென்ன
அமைந்தொளிரு மகுடநிரை சிரங்கண்மின்னத்
தூயமணிக் குண்டலங்கண் செவிகண்மன்னத்
துங்கமணிப் பணிகளொடு பதக்கந்துன்ன
ஆயவுப வீதமகன் மார்பின்மின்ன
அமையான சக்தியொரு கரத்திற் றுன்னக்
காயனமர் காரைநக ரரசடிக்கான்
கதிர்காம வேலவரே யாடீரூஞ்சல்

3. சந்திரனுஞ் சூரியனுங் கவிகைதாங்கத்
தருகிழலார் மருத்துவகற் கவரிவீசப்
புந்திமகிழ் தருமனுடை வாண்முன்பற்றப்
போற்றுசல பதியால வட்டநீட்டச்
சுந்தரமார் வள்ளிதெய்வ யானையோடுந்
துலங்குதிரு வடிவெவருங் கண்டுபோற்றக்
கந்திவளர் காரைநக ரரசடிக்கான்
கதிர்காம வேலவரே யாடீரூஞ்சல்

4. கருணைபொழி விழிநிரையீ ராறுமாடக்
கமலநிகர் திருதன மாறுமாட
வருணையில் புயநிரையீ ராறுமாட
வயங்குகரப் படைநிரைகள் பணிசெய்தாட
முரணழியும் மயிலினெடு கோழியாட
முறைபணியு மந்தணர்க ளடியராடக்
கரணமிகு காரைநக ரரசடிக்கான்
கதிர்காம வேலவரே யாடீரூஞ்சல்.

5. இந்திரனு மிமையோரு மலர்தூய்ப்போற்ற
ஏமமுனி வோராசி மறைகள்சாற்ற
வந்தனைசெய் நவவீரர் வாயில்காப்ப
மாலயனுங் கிருபைபெறக் கைகள்கூப்ப
முந்தவரு மேருகிரி வழியுதித்த
முனிவிசுவ நாதனருச்சிக்க வந்தோய்
கந்தரமார் காரைநக ராசக்கான்
கதிர்காம வேலவரே யாடீரூஞ்சல்.

6. கஞ்சனைமுன் சிறையிடைவைத் தருளுமூர்த்தி
கரிமுகமா வைங்கரனுக் கிளையமூர்த்தி
வஞ்சமிகு சூரனைமுன் வதைத்தமூர்த்தி
வானுலகங் கிந்திரற்கு வழங்குமூர்த்தி
மிஞ்சுமெழி லுமையம்மை தந்தமூர்த்தி
மிகுவள்ளி தெய்வானை யுகந்தமூர்த்தி
கஞ்சவயற் காரைநக ரரசடிக்கான்
கதிர்காம வேலவரே யாடீரூஞ்சல்.

7. நீரூருஞ் சடைமுடியோ னடியர்வாழ
நின்றபுக ழன்பினர்கள் போற்றிசெய்யப்
பேரூருங் கதிரைமலை நின்றுவந்து
பிறங்குதிரு யந்திரமே வடிவமாக
காரூருங் காரைநக ரரசடிக்கான்
கதிர்காம வேலவரே யாடீரூஞ்சல்.

8. சீருரு மால்மருகா வாடீருஞ்சல்
செய்யகதிர் வேலவரே யாடீருஞ்சல்
பன்னுமறைப் பிரணவத்தின் பொருளைமுன்னம்
பரமசிவ னுக்கருள்வோ யாடீருஞ்சல்
துன்னுமுசு குந்தனுளத் துயரந்தீரத்
துணைவர்தமை யீந்தருள்வோ யாடீருஞ்சல்
மன்னுவிழாப் பூசைபணி முதல்செய்வோர்
மனநிறைவு தந்தருள்வோ யாடீருஞ்சல்
கன்னல்வயற் காரைநக ரரசடிக்கான்
கதிர்காம வேலவரே யாடீருஞ்சல்.

9. பொதியமுனிக் கருள்பவரே யாடீருஞ்சல்
புண்ணியர்முன் வருபவரே யாடீருஞ்சல்
நதியருளும் பாலகரே யாடீருஞ்சல்
நம்பினரைப் பாலகரே யாடீருஞ்சல்
விதியருளும் வீறுளரே யாடீருஞ்சல்
வெல்மயிலா மேறுளரே யாடீருஞ்சல்
கதியருளுங் காரைநக ரரசடிக்கான்
கதிர்காம வேலவரே யாடீருஞ்சல்.

வாழி

வேதியர்க ளானமரர் முகில்கள்வாழி
வீதிமுறைசெ யரசனொடு பின்னோர்வாழி
நீதிமிகு மகளிர்நெறி நின்றுவாழி
நித்யசிவ சைவமுறை நீடுவாழி
காதவழுங் காரையர சடிக்கான்வாழி
கதிர்காம வேலவனு ரருளும்வாழி
நாதனவன் சத்தியர்கள் வேலும்வாழி
நம்பிநிதந் துதிப்போர்க ளயந்துவாழி.

எச்சரிக்கை

திருவாழுநகர் காரைப்பதிதேவா யெச்சரிக்கை
தேவன்சிவ னுமை யாடருஞ்செல்வா வெச்சரிக் [கை
அருமாமறைமுதலே யறுமுகவா வெச்சரிக்கை
அன்பர்தமக் கருளேபுரியாதி யெச்சரிக்கை
திருமான்மருகோனே சரவணனே யெச்சரிக்கை
தெய்வமகள் குறமான் மகிழ்கணவா யெச்சரிக் [கை
விருதாரரசடிக் கான்வருவிமலா வெச்சரிக்கை
விசெயந்தரு வேதர்தொழுபாதா யெச்சரிக்கை.

பராக்கு

சீர்பெருகு காரைநகர்ச் செல்வா பராக்கு
சிவனருளு மொருமுருகா தேவே பராக்கு
கார்பெருகு யானைமுக நெய்பீ பராக்கு
கன்னியர்க ளிருவர்பணி கணவா பராக்கு
நேர்பொருத சூரனுயிர் நீத்தாய் பராக்கு
நேயமுள வமரர்புகழ் நீதா பராக்கு
பார்பெருகு மரசடிக்கான் வந்தாய் பராக்கு
பன்னுமறை யந்தரவடி வானாய் பராக்கு.

வெண்பா

அந்தணகர் கரையரசடிக் காடதனில்
வந்தகதிர் காமவடி வேலோன்—முந்துபதத்
தாஞ்சலிசை தந்தனந்தாளோர் நாகரத்னம்மாள்
வாஞ்சைதரு மன்பின் வழி.

தாலாட்டு

காப்பு

கனகவரை யிருபாற்கங்கை வழிந்தாங்குக்
கனகருணையே மதமாக் காட்டுங்—கனகவரைக்
கோதண்ட னீன்றதிருக் குஞ்சரத்தைக் கைதொழு
தீதாண்டார் சேர்வார் திரு. [வார்

நூல்

1. பூமாது நாமாது போதசுக மாமாது
தாமேவு பேரூர்ச் சரவண நாயகனே
2. மாணிக்க மால்வரைமேன் மன்னுசெக்கர் வானமெ
வேணிப்பிரான் றேளின்மேவுஞ் சிறுகுருந்தோ[ன
3. உலகீன்ற மாதாவுதவிய பால்கஞ்ச
மலர்வாய்க ளாறுமணக் கின்றவான் குருந்தோ
4. பெண்ணுய்ந்த கற்புப்பிடியும் பிணைமானுங்
கண்ணாரக்கண்டு களிக்கவரு கற்பகமோ
5. நீலமயில் வாகனனே நெட்டிலைவே லாயுதனே
கோலநிறை கோழிக்கொடி படைத்த சேவகனே
6. ஆறிரண்டு தோளானே ஆறுமுகத்தானே
தேறுமறை கொஞ்சுஞ் சிறுசதங்கைத் தாளானே
7. மகுடங்க ளாறுமணிக் குழைகளீ ராறுங்
திகழ்கடக மீராறுஞ் சிலம்புந் தரித்தானே

8. சடைமேற் பிறையைமுன் னாறன்னால் பிணித்தணி
விடையான் மடிமேல் விளையாடு மாரமுதே [ந்து
9. செஞ்சதங்கை கொஞ்சச்சிறு கிங்கிணியாடக்
கஞ்சமலர்த் தாளுமையாள் கண்களிக்க வந்தானே
10. ஆய்மாரறுவர் களுமம்பிகையுங் கங்கையினுஞ்
சேயென்றேந்திச் சிரமோந்துகொள் குருந்தோ
11. கானந்திரிவேடர் கன்னிகைக்காகப் பரண்மேல்
ஞானங்கமழ்பாத நண்ணவைத்த நாயகமோ
12. புராரிசிறுவா வென்னப்பூ வுலகங்காக்கு
முராரிமருகா வென்னமுன் வந்து நின்றானே
13. அமராபதியி லமரரெல்லாஞ் சூழ்ந்து
குமரா கிவாழ்ந்த வெள்ளைத்தந்திமேல் வந்தானே
14. அண்டமநந்த மருளிவி னின்றிலங்கக்
கண்டமரர்போற்றக் கனகவரை நின்றானே
15. தவமுனிவர்தேவர் சயசய வென்றேத்த
நவவீரமணிக்கு நடுவிருந்த நாயகமோ
16. பொதியமுனி யகத்துபொங்கு மிருணீங்க
விதியுமறியா விளக்கேற்றுந் தேசிகனே
17. அருணகிரிநாத னருந்தமிழ் நூற்கீரன்
கருணைபெறவோதுங் கவிமாலைத் தோளானே
18. பிரமனறியாப் பிரணவத்தி னந்த
மரனுச்செவிகுளிர வன்றுரைத்த சற்குருவே
19. அரிவைமுருகா வென்றழைக்கு முன்னேவந்து
காமுதவிவந்த கருணைப்பெருந் தேவோ
20. வேலைக்கலைப்பயின் றமேதகுபொய் யாமொழிக்குப்
பாலைக்கடையிதென்று பகர்ந்தபெரும் பாவலனே
21. தார்மார்பகனே சமரபுரி நாயகனே
சூர்மார்புருவத் தொளைத்தவடி வேலவனே
22. குன்றமுங்கொக்குங் குரைகடலுஞ் சூர்மார்புங்
குன்றவடிவேலெறிந்த கொற்றவனே நற்றவனே
23. சமரபுரித்தேவோ தணிகைமலைத் தேனே
வமரும்பழனிமலைக் கானமணி விளக்கோ
24. சீரலைவாய்முத்தோ திருப்பரங்குன் றத்தரசோ
வேரகத்திலென்று மிருந்த பெருவாழ்வோ
25. பழமுதிர்சோலைப் பரனே குறிஞ்சிக்
கிழவனென நல்லோர் கிளக்கும் பெருமானோ

26. சங்கப்பலகைத் தமிழைப் புலவோர்க்குப்
பங்கப்படாமற் பகர்ந்தபெரும் பாவலனே
27. நாயினேன் செய்பிழைக ளைடாதென துளமே
கோயிலாக்கொண்டு குடியிருந்த மெய்ப்பொருளோ
28. வானவர்சூழ்போரூரை வந்தடைந்த பேர்க்கெல்லா
மோனசுகங்காட்டி முத்திதருந் தேசிகனே
29. உள்ளத்திமிர மொழித்துச் சிவானந்த
வெள்ளத்துளன்பர் விளையாட வைத்தானே
30. ஆனேறுவந்தம்மை யளித்தவள் ளப்பாலைப்
புரைதீரவுண்டவரைப் போதமுறக் கண்டானே
31. பொற்குளம்போற் சின்னம் பொற்பார்சிவிகையோ
நற்றாளப்பந்தரையு நம்பர்கையிற் பெற்றானே [டு
32. மதுரைச்சமண மதகரிக ளெல்லாஞ்
சிதறத்துரந்த சிவசமய கோளரியோ
33. மயிலைநகர்தன்னில் வன்னியடு மென்பைக்
குயிலைநிகருமொழிக் கோதையாய்ச் செய்தானே
34. ஆச்சாபுரத்தி லனந்தமுயிரை யெல்லாம்
பெச்சோடுளங்கடந்த பேரின்பம் வைத்தானே
35. வந்தோர்பிணிதீர்க்கு மாமருந்தோ வன்பருக்குச்
சந்தோடநல்குஞ் சமரபுரி மாநிதியோ
36. தாயோதமரோ வென்றாதையோ சற்குருவோ
தேயாக்கருணைபொழி தென்போரி வேலவனே
37. முத்தோகுலிசமோ மூதெளிமா ணிக்கமோ
சித்தோதென்போரூர்ச் சிவானந்த வாரிதியோ
38. பாலோசெகதோனே பழமோ பழமறையோ
மேலோர்புகழ் போரூர்வீற்றிருந்த பார்த்திபனே
39. அன்னமோ பைங்கிளியோ லம்பிகைக்கண் ணுக்கி
சொன்னமோ போரூர்ச்சுக பூரணவொளியோ [னிய
40. ஞானக்கரும்போ மெய்ஞ்ஞான தக்கடலோ
தானற்றார்போற்றுஞ் சமரபுரித் தண்ணளியோ
41. என்றென்றேதாராட்டி யெல்லோரு மின்பமுற
நன்றருளேசெய்யு மெங்களைதன் போரூரிறையே

## திருப்பள்ளி யெழுச்சி

திருமலிகுணதிசை யருணனல் லுதயஞ்
செய்தன விருவினைச் சமமலபாகப்
பருவமதுடை யவர்தமதுள மெனவே
பாரகம் விளங்கின வவர்குணக்கிரிமே
லருலொளிவீசி நின்றிலகுமுன் பதம்போ
லருக்கனுங் குணதிசைப் பொருப்பெனுகின்று
னிருளரு குறுமுனி பரிவியபோரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

2. ஆடுறமணிமணி மயில்கிறைவிரித் ததன்மே
லருளொளிதிகழ நீயெழுந்தருண் முயைபோற்
பீடுறுமரகதக் குரகதம் பூண்ட
பெருந்தடந்தேர்மிசை யெழுந்தனன் கதிரோன்
வாடுறுதாமரை நினதருளடைந்த
மாதவர்முகமென மலர்ந்தன வெங்கு
மேடவிழ் மலர்ப்பொழில் பொதுளியபோரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

3. பகருசுடர் விடுமுனதயில் கண்ட
பதகந்த மனமெனச்சுரர் மனமெனவே
புகருடு மழுங்கின விகசிதமாகிப்
பொலிந்தன முளரிகட்டங் தொறுமுனது
திகழ்பதமடைந்தவ ருயிர்ச்சிறு போதக
தேய்ந்தென மதியொளி தேய்ந்ததுகுணபா
லிகலறு கதிரெழு கின்றதுபோரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

4. என்றனைக் கைப்பிடித் தாளுறுமிறைவ
னெழில்பெறு மலர்விழி மலர்ந்தெழுசமய
முன்றனதுளவிருள் போக்குவ நோக்கா
லொலியில் வருகென வெல்வினைக்கூவி
நின்றனதிருக் கொடியமைதுறு முறையோ
நீடுறு மனைதொறுங் கூவினமிகவு
மின்றனை யாண்டுகொண் டருளியபோரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயோ.

5. மன்மதன் விருதுகளுதின பொழிவாய்
மாயவன் கர்ப்படை தொனித்ததுனெதிரே
தென்மலிமலரவ னார்திக டடர்த்துச்
சிலம்பினனின் கொடிபத வெச்சரிக்கை

பன்முறை பண்ணுவபோல் மனைதோறும்
பாழியங் குமலொலி காட்டினவருளா
லென்மல விருடெறு மாரியபோரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

6. கின்னரர் கிம்புருடர்களொடுகெருடர்
கெந்தருவர்கள் சித்தர்வித்தி யாதரரு
மன்னியமுரசதிர் சிகரியுன் வாய்தல்
வந்தனரைந் தெழில்வாத்தி யந்தொனிக்க
பொன்னிலமடவா ரின்னில மடவார்
புரிந்தனர்நாடக மிருந்தகை மயில்போ
லின்னருள் பொழிமுகிலே திருப்போரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

7. வானவர்புகழ் நவீரர்களொருபான்
மால்வரை யனகணநாதர்களொருபாற்
றீனமில் எண்டிசைப் பாலகரொருபாற்
றேவர்கண் முனிவர்கள் பாதலலொருபாற்
றூனம துதவிய சுரங்கொடுபாரி
சாதகன்மலர் மழைபொழிந்தனர் பணிந்தே
யேனலம் புனமலி சாரலம்போரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

8. மறைமுடி யுணர்ந்தவர் மறையவ ரடியார்
வருபரிசாலக ரரசர்கள் வணிகர்
குறைவறு வளவர்கண் மற்றுளரெவருங்
குழுமியே வடமொழி தென்மொழிப்பாவா
னிறைதயவுட னினைப்புகழ்ந்து நின்றேத்தி
நீளுறுதண் டெனப்பணிந் தெழுகின்றா
ரெறிமணி யருவிகள் சொரிகிரிப்போரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

9. விலையறுநவ மணிமாலைகள் கொணர்ந்தார்
வெயில்விடுகுலிச கேயூரங்கள் கொணர்ந்தார்
ரலகறுமணிசெறி மகுடங்கள் கொணர்ந்தார்
ராழிமதாணிக ணூபுரங் கொணர்ந்தார்
நிலைபெறுகவகிதழ் நேத்திரங் கொணர்ந்தார்
கிறைந்துளம் வேண்டிய பெறவுறப்பணிந்தா
ரெலையறு பெருவரமருள் செயப்போரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

10. ஐங்கரங்கொடு தழுவுநகினை யொருகோம்
பணையுண்மகிழ்ந்தது முக்கணம் பொருப்புன்
பங்கயமுகவணி கண்டுகண் களிப்பப்
பரிவொடு நினைந்தது பனிவரை யுயிர்த்த
செங்கயல்விழிப் பசும்பிடிநினை மடிமேற்
சேர்த்தருட்பா றரத்திருவுளத் துனுமீண்
டெங்களை யாண்டுகொண் டருளியபோரு
ரிறையவனே பள்ளியெழுந் தருளாயே.

---

# திருப்பதிகம்.

## விநாயகர் காப்பு வெண்பா.

அரசடியிற் காட்டி லமைகோயில் கொண்டோன்
பரசடியார் போற்றும் பகவன்—வரமுருகன்
மற்பகர் புயாசலத்தில் மாலைபதி கம்புனையக்
கற்பக விநாயகன்றாள் காப்பு.

## ஆசிரியவிருத்தம்.

1. நவகோடி பானுக்கள் நிகரான வதனமும்
நவரத்ந கிரீடமுடியும்
நன்மைபெறு இருபைதிகழ் நயனமீ ராறுடன்
நளினமலர் முகமு நகையும்
பவளமெனு மேனியுங் கனசகுண் டலசயில
பன்னிருபு யத்தினழகும்
பலவாயு தங்களொடு வேலணி கரங்களும்
பட்டுடைசி றந்தவிடையும்
குவலயம் புகழுவுயர் சிற்றடியி லணிகின்ற
குமிறுபரிபுர வணிகளும்
குறமாது தெய்வானை யிருமருங்குஞ் சூழ்ந்து
குலவுக ருணைப் பார்வையும்
கவலையற் றனுதினமு மமரர்கள் வணங்கவுங்
காட்சிதக் தெனையாளுவாய்
காரைநக ரரசடிச் காட்டிலமை கோயிலுறை
கதிர்காம வடிவேலனே.

2. உலகடங் கலுமருண வெயிலுமிழு முபயமுவி
யொருகோடி நிகர்மேனியும்
உமைமுலைப் பாலொழுகு கடைவாய மிளநகையு
முச்சியுந் திகழ் கொண்டையுங்

திலதமுஞ் சுட்டியுந் திருநீறு மழகுபொழி
　　திருநுதலு மருண்மாரிசேர்
திருநயன மூங்கருணை வதனமும் அம்மைதரு
　　திருமுலைப் பாற்கிண்ணமும்
இலகுசெங் கைம்மலரு மஞ்சலெனு மொருகரமு
　　மிருசெவியு முபயரவியாம்
இருகுண் டலங்களும் பாததாமரைகளு
　　மிலங்குங் குழந்தை வடிவமாய்க்
கலகலென வேசிலம் படியனேன் காணநீ
　　கடுகியென் முன்னர்வருவாய்
காரைநக ரரசடிக காட்டிலமை கோயிலுறை
　　கதிர்காம வடிவேலனே.

3. பெற்றதா யும்பிதா வும்பிதா மைப்பெற்ற
　　பெரியவனு மூரியதாயும்
பிறவிப் பெரும்பிணிக் கொருமருந் தும்பெரிய
　　பிழைகளெல் லாம்பொறுக்கும்
கொற்றவனு நற்றவப் பயனுமிகவர மூங்
　　கொடுத்திடும் பெருவள்ளலும்
குறைவற்ற செல்வமும் நிறைவுற்ற மெய்ஞ்ஞான
　　குருவுமென் குலதெய்வமும்
மற்றுள்ள சித்தியுஞ் சுற்றமும் நீயென்று
　　வந்தடைந் தேனையருளா
மலர்க்கரம் கொண்டுபர மானந்த வமுதூட்டி
　　மதலையெனவே வளர்ப்பாய்
கற்றவர்க ளுள்ளத்தி லுற்றவருள் நேசனே
　　கருணாகரக் கடவுளே
காரைநக ரரசடிக் காட்டிலமை கோயிலுறை
　　கதிர்காம வடிவேலனே.

4. இன்னமெத் தனைநா ளிருக்குமோ காயமென்
　　றேங்குதே நெஞ்சமையோ
இடருடலி னுன்படுவ தெந்தை நீயல்லாமல்
　　லிவ்வுலகி லியாவரறிவார்
என்னையுன் னடியார்கு ழாத்துடன் சேர்ப்பதற்
　　கின்னமெந் நாட்செல்லுமோ
இன்றுவந் தருளுவாய் நாளைவந் தருளுவா
　　யென்வழி பார்த்திருப்பேன்
அன்னையே யென்னைவந் தஞ்சலென் றுண்டுமெய்
　　யடியரொடு கூட்டுவாயென்

றனுதினமு மழுதழுது மெலிவதல் லாமலின்
கடியனேன் செய்வதென்னே
கன்னலே தேனே கனிந்தகனி யேபெரிய
கரியமா லின்மருகனே
காரைநக ரரசடிக் காட்டிலமை கோயிலுறை
கதிர்காம வடிவேலனே.

5. சரணமும் சரணமல் லாலினுகு வேறில்லை
தாங்கிடுஞ் சர்வசீவ
தயாபர னெனக் கருள்வை யென்றுன்னை நம்பியுன்
சந்நிதியை வந்தடைந்தேன்
மரணகா லந்தனின் வந்துநின் கோயிலதில்
வந்துசேரச் செய்துநீ
மாமயிற் பரவிமிசை வந்துமுன் றோன்றியே
வளமிகு வலச்செவியிலே
பரமவுப தேசம்வைத் தாவிபர மானந்த
பரமசல தியின்மூழ்கிடப்
பாழான காயமுன் பரமதீர்த் தத்திலே
படிந்திட வரந்தந்தருள்
கரணங் கடந்தமுழு முதலேசிதா காச
கனகசபை நடனர்புதல்வா
காரைநக ரரசடிக் காட்டிலமை கோயிலுறை
கதிர்காம வடிவேலனே.

6. மெய்யென்று பெயர்பெற்ற பொய்யான வென்னுடலை
விடுகால நானறியவும்
விமலமணி கோயில்வந் தனவரத முன்பதம்
விநயமாய்ச் சேவிக்கவும்
துய்யவெண் ணீறங்கம் மெங்குமே பூசவும்
சுத்தகண் டிகைசூடவும்
தொண்டு மடியார்கடாம் தோத்திரஞ் சொல்லியே
சூழ்ந்துகொண் டேநிற்கவும்
ஐயந்த நேரத்தி லுந்தாம னிற்கவும்
மைம்பொறிக ணெறிநிற்கவும்
அறிவுபர மானந்த சின்மயா காசநின்
னடியிணைகள் சிந்திக்கவும்
கைகடொழ வாயஞ் செழுத்துச் சரிக்கக்
கடாட்சம்வைத் தருளையனே
காரைநக ரரசடிக் காட்டிலமை கோயிலுறை
கதிர்காம வடிவேலனே.

7. தற்பரஞ் சோதியே பூரணப் பிரமமே
சதுர்முகப் பிரமாதியோர்
சதுர்மறைபு மடிமுடிகள் காணும லேதேடு
சச்சிதானந்த சிவமே
அற்புதா னந்தவரு ளமுதமழை மேகமே
யனந்தகல் யாணகுணமாய்
அகண்டபர வெளியேயென் னுயிருக்குயிரே
யருட்கருணை மேருகிரியே
சிற்பரந் தந்தசிந் தாமணிக் குவியலே
செந்தே னெடுஞ்சலதியே
தெள்ளமுத மேசன்ம மாற்றுதற் கடியார்க
டேடவரு மருமருந்தே
கற்பகச் சோலையே யென்றடிய னேனுனைக்
கவிமாரி சொரியவருளாய்
காரைநக ரரசடிக் காட்டிலமை கோயிலுறை
கதிர்காம வடிவேலனே.

8. மானிடப் பிறவிபுவி வந்ததிது நின்பணிகள்
மரபுடன் செய்யவென்றே
மறைவேத வாகமபு ராணவிதி காசங்கள்
மற்றவை முழங்கிடவும்
ஆனிடத் தைந்தாடு மமலர்தரு பாலனே
யப்பணிகள் கனவுநினையேன்
ஆற்றருகில் நிற்கின்ற மரமெனப் பிரபஞ்ச
வாஞசையி லலைந்துவிழுவேன்
வானிடத் தவர்களும் வந்துநின் மலரடிகள்
வந்தித்து நிற்பரன்றோ
வளருமேழ் கொண்டுழலு தமியனேற் குன்பணிசெய்
மார்க்கத்தை யருளல்வேண்டும்
கானிடத் தணிகடம்பமலர் மாலையணி மார்பனே
கருணை குன்றுதமலையே
காரைநக ரரசடிக் காட்டிலமை கோயிலுறை
கதிர்காம வடிவேலனே.

9. நீரினிற் குமிழியிள மைப்பருவ மெனமொழிவர்
நீர்த்திரை நிலாதசெல்வம்
நீரினி லெழுத்தென்பர் யாக்கைநமர் காளிந்த
நிலைமையி லிருந்துகொண்டு
காரினிற் றருவிற் கொடைவள்ள லாரென்று
கயவரை வியந்துபாடிக்

காலத்தை வாளா கழித்ததே யன்றியும்
கமலவடி பரவகிலேயேன்
பாரினி லுனைத்தொழாப் பாவியே னுகினும்
பட்சமாய்க் காத்தருளுவாய்
பற்றலர் புரஞ்சுட்ட கொற்றவர் குருக்களே
பாவலர்க் கரியதுணைவா
காரினி லிவர்ந்துவரு மிந்திரர்க் கரசாட்சி
கருணையுட னீந்தபரனே
காரைநக ரரசடிக் காட்டிலமை கோயிலுறை
கதிர்காம வடிவேலனே.

10. விண்ணின்மணி யென்பனே வேதமணி யென்பனே
வேதாந்த மணியென்பனே
வேண்டு மென்பனே போதமணி யென்பனே
வேண்டுநவ மணியென்பனே
பண்ணின்மணி யென்பனே பாட்டின்மணி யென்ப
பகர்பதும மணியென்பனே [னே
பழமைமணி யென்பனே பட்சமணி யென்பனே
பகருநவ நிதியென்பனே
திண்ணின்மணி யென்பனே தமியனே னுன்றனைத்
தெய்வமணி தானென்பனே
தேட்டமணி யென்பனே காட்சிமணி யென்பனே
திகழ்கருணை மணியென்பனே
கண்ணின்மணி யென்பனே காதன்மணியென்பனே
கற்பமணி தானென்பனே
காரைநக ரரசடிக் காட்டிலமை கோயிலுறை
கதிர்காம வடிவேலனே.
அந்தணர்கள் வாழிமறை யாகமம் வாழியே
அரசர்செங் கோலும்வாழி
அணிவைசியர் காராளர் பசுமேக மங்கையர்கள்
அருமைபெறு கற்பும்வாழி
சந்தமுள கலைகளறி குகனடியர் சைவநெறி
தரணியிசை மல்கிவாழி
தகுதிபெறு மிதிகாச பதினெண் புராணமுறை
சாற்றுபவர் வாழிவாழி
சந்ததமு மவைகளைக் கற்றுரை விரிப்பவர்கள்
தனலாப முற்றுவாழி
தரமின்றி யேகேட்கு மவர்தர்ம தானங்கள்
தருபவர்கள் கிளைகள்வாழி

கந்தமுள சோலைசெறி யரசடிக் காட்டிலமை
    காமராலயமும் வாழி
கதிர்காம வடிவேலர் பாதம் புயங்கடாம்
    கதியுதவி வாழிவாழி.

கனவரங்க ளீயுங் கதிர்காம வேலன்
மனமுவந்த நற்பதிக மாலை—அனவரதம்
பாராயணஞ் செய்வோர் பன்னு மிருமையின்பஞ்
சீராயடைவார் தெளி.

முற்றிற்று.

[இக்கோவிலில் உள்ள மூலமூர்த்தியையும் உற்சவ மூர்த்தியையும் போல் நீங்கள் எந்தத் தேசத்திலும் எந்த இடத்திலும் காணமுடியாது.]

தேசிய நூல் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

சவ
ங்கு